ஆசிரியரிடமிருந்து........!



## நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?

யோவான் 21:15

பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் இயேசுவின் இணையற்ற நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசு தன்னுடைய சீஷனாகிய பேதுருவினிடத்தில் 'நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?' என்று கேட்ட கேள்வியை இன்றும் நம்மிடத்தில் கேட்கிறார். நம்முடைய தேவன் அன்புள்ளவர். தேவன் அன்பாகவே இருக்கிறார் என்று வேதம் கூறுகிறது (1யோவான் 4:8,16). தேவனுடைய அன்பு எப்படிப்பட்டது? அந்த அன்பிற்கு நாம் எப்படி பதில் செய்வது என்று உங்களோடு சுருக்கமாக பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

### தேவன் உங்களில் அன்பாக இருக்கிறார்

தேவனுடைய பண்புகளில் உன்னதமானது அன்பு. தேவன் செய்தது, செய்கிறது மற்றும் செய்ய போகிறது அனைத்தும் அவருடைய அன்பின் வெளிப்பாடாகவே இருக்கிறது என்று வேத மனிதர் A.W.டோசர் கூறுகிறார். இயேசு முந்தி அன்புகூர்ந்தார், முடிவு பரியந்தம் அன்பு கூர்ந்தார், முடிவில்லாமல் அன்பு கூறுகிறார். அவருடைய அன்பின் தன்மைகளை சற்று காண்போம்.

**தியாக அன்பு:** தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை நமக்காகக் கொடுத்து அன்பு கூர்ந்தார் (யோவான் 3:16; 1யோவான் 4:9,10). குமாரனாகிய இயேசு தம்முடைய ஜீவனை நமக்காக சிலுவையில் தந்து நம்மீதுள்ள அன்பை வெளிப்படுத்தினார் (1 யோவான் 3:16). தேவனுடைய அன்பின் உச்சக்கட்ட வெளிப்பாடு சிலுவை மரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது!

**நிபந்தனையற்ற அன்பு:** நாம் பாவிகளாயிருக்கையில் இயேசு நமக்காக மரித்து, நம்மேல் வைத்த அன்பை விளங்கப் பண்ணினார் (ரோமர் 5:8). நம்முடைய நீதி, கிரியை, திறமை, பின்னணியத்தின் அடிப்படையில் அவர் அன்பு கூறாமல், நம்மை நிபந்தனையற்ற முறையில் அன்பு கூர்ந்தார் என்று வேதம் கூறுகிறது (உபா.7:7, 9:4,5; தீத்து 3:5).

**மன்னிக்கும் அன்பு:** தன்னை சிலுவையில் அறைந்தவர்களை பார்த்து, 'பிதாவே இவர்களுக்கு மன்னியும்' என்று ஜெபித்த அன்பு (லூக்கா 23:34). தன்னைக் காட்டிக் கொடுத்தவனையும் 'சிநேகிதனே' என்று அழைத்த அன்பு (மத்.26:50). நம்முடைய பாவங்களை மன்னித்து மறந்து விடுகிற அன்பு (லூக்கா 15:18-20; எபே.4:32).

**சிட்சித்துப் பரிசுத்தமாக்கும் அன்பு:** நான் நேசிக்கிறவர்களெவர்களோ, அவர்களைக் கடிந்து கொண்டு சிட்சிக்கிறேன் என்று இயேசு சொல்லுகிறார் (வெளி. 3:19; எபி. 12:6). நமது நன்மைக்காகவும், நாம் மேலும் பரிசுத்தமடைந்து, அதிகக் கனிகளைக் கொடுக்கும்படியாகவும் இயேசு நம்மை அவ்வப்போது சிட்சித்து நம்மைச் சரியான பாதையில் நடத்துகிறார் (யோவான் 15:2, சங்.119;67, 71).

**ஆசீர்வதிக்கும் அன்பு:** தேவன் தம்முடைய அன்பினால் நம்மை ஆசீர்வதிக்கிறார். நம்மேல் மனதுருக்கம் உடையவராய் நம்மை விசாரித்து, நம்முடைய தேவைகளை சந்திக்கிறவராயிருக்கிறார் (உபா.7:13; மத்தேயு 15:32). மேலும் அவரது அன்பு நித்தியமானது (Unending), மாறாதது (Unfailing),அளவற்றது (Unlimited), ஆராய்ந்து முடியாதது (Unfathomable) என்று வேதம் கூறுகிறது (எரேமியா 31:3; ஏசாயா 49:15,16; எபேசியர் 2:4;3:18,19). ஆ! அவருடைய அன்பின் அகலம், நீளம், ஆழம், உயரம் தான் எத்தனை பெரிது!

## நீங்கள் தேவனிடத்தில் அன்பாய் இருக்கிறீர்களா?

இவ்விதமாக நம்மிடத்தில் அன்பு கூரும் தேவன், நாம் அவரில் அன்பு கூர வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். அவர் முந்தி அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரில் அன்பு கூறக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று வேதம் கூறுகிறது (1 யோவான் 4:19). உண்மையான கிறிஸ்தவன் இயேசு தனக்காக செய்தவைகளை நினைத்து அவரில் ஆழமான அன்பு செலுத்துவான். தேவ அன்பு ஒரு விசுவாசியின் வாழ்வில் இருக்குமாயின் அது குறைந்தது 5 விதங்களில் வெளிப்பட வேண்டும்.

### 1. வேதத்தின் மேல் அன்பு
### (Love for the SCRIPTURES)

நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதே அவரிடத்தில் அன்புகூருவதாகும் (1 யோவான் 5:3). ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவர் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான் என்று இயேசு கூறினார் (யோவான் 14:23). அவருடைய வசனத்தை கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும் (1யோ.2:5). தேவனை நேசிப்பவர்கள் அவருடைய வார்த்தையையும் நேசிப்பார்கள். சங்கீதக்காரன் 119ம் சங்கீதத்தில் 8 முறை, தான் வேதத்தை நேசிப்பதாகக் கூறுகிறான் (வசனம் 47,48,97,113,119,159,163,167). தேவனுடைய வார்த்தையின் மேல் அவருக்கு இருந்த அன்பு, அதைத் தியானிக்கவும், அதற்குக் கீழ்ப்படியவும் அவரைத் தூண்டியது. ஆகவே, நீங்கள் தேவனில் அன்பாயிருந்தால் அவருடைய வார்த்தையை நேசித்து, வாசித்து, தியானித்து அதற்கு கீழ்ப்படிந்து நடப்பீர்கள் (உபா.10:12, யோசுவா 22:5).

### 2. தேவாலயத்தின் மேல் அன்பு
### (Love for the SANCTUARY)

தேவன் மேலுள்ள தம்முடைய அன்பு நாம் அவருடைய ஆலயத்தை எவ்வளவு அதிகமாக நேசிக்கிறோம் என்பதில் விளங்கும். திருச்சபை இயேசுவின் இரத்தத்தினால் வாங்கப்பட்டது (அப்.20:28). திருச்சபையைப் புறக்கணிக்கிறவர்கள் தேவனை நேசிக்க முடியாது (எபி.10:25). தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதனாகிய தாவீது, நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன் என்றும் (சங்.27:4), கர்த்தருடைய ஆலயத்திற்கு போவோம் வாருங்கள் என்று சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன் (சங்.122:1) என்றும், உமது ஆலயத்தை வாஞ்சிக்கிறேன் என்றும் கூறுகிறார் (சங்.26:8). தேவனை நேசிக்கிறவர்கள் திருச்சபையில் உற்சாகமாக பங்கெடுப்பார்கள். திருச்சபை ஊழியங்களில் ஆர்வமாய் பங்குப்பெற்று, திருச்சபை தரிசனத்தை நிறைவேற்றப் பிரயாசப்படுவார்கள். மேலும் திருச்சபையின் ஊழியங்களுக்கு உற்சாகமாகக் கொடுப்பார்கள் (1 நாளா.29:3-7).

### 3. பரிசுத்த வாழ்வின் மேல் வாஞ்சை
### (Love for the SANCTIFIED LIFE)

கர்த்தரில் அன்புகூருகிறவர்களே, தீமையை வெறுத்துவிடுங்கள் என்று வேதம் கூறுகிறது (சங்.97:10). தேவனை நேசிக்கிறவர்கள் அவர் விரும்புவதை விரும்புவார்கள்.

அவர் வெறுப்பதை வெறுப்பார்கள். கர்த்தர் பரிசுத்தத்தை சிநேகிக்கிறார் (மல்.2:11), நீதியை விரும்புகிறார் (எபி.1:9), அக்கிரமத்தை வெறுக்கிறார் (நீதி.6:16-19) என்று வாசிக்கிறோம். தேவனை நேசிக்கிறவர்கள் பரிசுத்த வாழ்க்கை வாழ வாஞ்சையும், வைராக்கியமும் உடையவர்களாயிருப்பார்கள். அவரைப்போல மாற வேண்டும் என்பதே அவர்களின் ஏக்கமாக இருக்கும் (1பேதுரு 1:15;வெளி. 22:11).

### 4. தேவ பிள்ளைகளின் மீது அன்பு (Love for the SAINTS)

நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும் என்று வேதம் பலமுறை நமக்குப் போதிக்கிறது (யோவான் 13:34; எபே.5:2; 1பேதுரு 1:22). இன்று தேவனை நேசிக்கிறேன் என்று கூறுகிற அநேகர் குடும்பத்தாரை, உடன் பிறந்தவர்களை, சபை விசுவாசிகளை, ஊழியர்களை நேசிப்பதில்லை. தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராதவன் தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான்? என்று வேதம் கூறுகிறது (1 யோவான் 4:20). மற்றவர்களிடத்தில் அன்பில்லாதவன் தேவனை அறியான் (1 யோவான் 4:8). மற்றவர்களை உண்மையாகவும், ஊக்கமாகவும், மாயமில்லாமலும் நேசிக்க வேண்டும் (1 யோவான் 3:18; 1 பேதுரு 4:8; ரோமர் 12:9). தேவனை நேசிக்கிறவர்கள் ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்க வேண்டும். பரிசுத்தவான்களுடைய குறைவில் உதவி செய்ய வேண்டும். பிறருடைய குற்றங்களை மன்னிக்க வேண்டும் (1 யோவான் 3:17; கலா. 6:10; எபே 4:32). தூற்றி திரியக்கூடாது. அன்பு திரளான பாவங்களை மூடும் (லேவி. 19:16-18; நீதி. 10:12).

### 5. இரட்சிக்கப்படாத மக்களின் மீது அன்பு (Love for the SINNERS / UNSAVED)

இயேசு பாவிகளை இரட்சிக்கவே உலகத்தில் வந்தார் (1தீமோ.1:15). தேவன் ஒவ்வொரு மனிதனும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார் (1தீமோ.2:4). அவரை நேசிக்கிறவர்கள் அவருடைய இந்த இதயத் துடிப்பை அறிந்து செயல்படுவார்கள். இரட்சிக்கப்படாத நமது உறவினர்கள், நண்பர்கள், பட்டணத்தின், தேசத்தின் ஜனங்களுக்காக ஜெபிக்க வேண்டும். சுவிசேஷம் அறிவிக்க வேண்டும். அவருடைய விருப்பத்தை நம் வாழ்வில் நிறைவேற்ற வேண்டும். கிறிஸ்துவின் அன்பு என்னை நெருக்கி ஏவுகிறது என்று கூறின அப். பவுல் (2கொரி.5:14), மக்களின் இரட்சிப்பிற்காக ஜெபித்தார். சுவிசேஷத்தை அறிவித்தார். கடினமாக உழைத்தார். தமது உயிரையும் கொடுத்தார். உம்மை நேசிக்கிறேன் என்று கூறின பேதுருவிடம் இயேசு, 'என் ஆடுகளை மேய்ப்பாயாக' என்றார் (யோவான் 21:15-17). தேவ அன்பு நம்மை சுவிசேஷத்திற்காக உழைக்கவும் கொடுக்கவும் ஏவுகிறதா? கிறிஸ்துவின் கல்வாரி அன்பிற்கு ஈடாக நாம் என்ன செய்கிறோம்? சிந்திப்போம்! செயல்படுவோம்!

கடைசியாக பிரியமானவர்களே, இயேசுவுக்கு அன்பான சீஷன் அவர் மார்பில் சாய்ந்து கொண்டிருந்ததுப்போல அவரோடு அனுதினமும் ஜெபத்தின் மூலம் நெருங்கி வாழுங்கள் (யோவான் 13:23). இயேசுவை நேசித்த மரியாளைப் போல அவருடைய பாதத்தில் அமருங்கள். சிறந்ததை அவருக்கு கொடுங்கள் (லூக்கா 10:39, யோவான் 12:3). மேலும் இயேசுவே உம்மை நேசிக்கிறேன் (I Love You Jesus) என்று தினமும் பலமுறை உள்ளத்தின் ஆழத்தில் இருந்து சொல்லுங்கள். தேவனை முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும், முழு சிந்தையோடும் அன்பு கூருங்கள் (மத்தேயு 22:37; லூக்கா 10:27)!

நம்முடைய கர்த்தராகிய இயேசுவினிடத்தில் அழியாத அன்புடனே அன்புகூருகிற யாவரோடும் கிருபை உண்டாயிருப்பதாக. ஆமென் (எபே.6:24).

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி தெற்கு மண்டலம்.